கும். அதனால் தான் அதை யோசிக்கவில்லை. விவசாய அதிகாரி ஒரு வர் விஸ்வநாதன் என்பவர் இந்தத் துறையில் அனுபவம் உள்ளவராக இருக்கிறார். ஆடுதுறையில் பணியாற்றும் போது, அவர் இந்த முறையைப் பயன்படுத்தினார். அவர் இப்போது லீவில் இருக்கிறார்.

திரு. கே. ராஜாராம் : நேற்று மாலை பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். சென்னையை ஒட்டி, பூமிக்கு அடியில் உள்ள நீர் நிலைகளை ஆராய்வதற்காக ஐக்கிய நாடு ஸ்தாபனத்தின் உதவி பெற்று பலர் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று இருக்கிறது. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாமா, வேறு வகைகளில் உபயோகிக்க முடியுமா என்பதை அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொல்லும் யோசனை கருத்தில் கொள்ளப்படும். தனிப்பட்ட பலர் இந்த தண்ணீர் ஓட்டத்தைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் நான்கு பேர்கள், டி. எஸ். வேதபுரி முதலியார், கடலூர், டி. எஸ். குப்புசாமி, சென்னை, கோவிந்தசாமி, செஞ்சி, காளிமுத்து பிள்ளை, தாம்பரம் என் பவர்கள். ஏற்கனவே சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கிராமக் குடிநீர் திட்டத் தின் கீழ் ஒரு கிணறு தோண்டுவதற்கு 25 ரூபாய் ஊதியம் கொடுத்திருக் கிறார்கள். அவர்களுடைய பணி பல இடங்களில் சிறப்பாக இருந்து வரு கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : இப்போது சர்க்காரால் அங்கீகரிக்கப் பட்டவர் என்று ஒருவர் எங்கள் பகுதியில் வந்து ஒரு இடத்தைக் காட்டி தோண்டச் சொன்னார். அதில் 500 அடி தோண்டியதும் தண்ணீர் இல்லை. மற்றொரு இடத்தைக் காட்டினார். அதிலும் அதிக ஆழம் தோண்டி பார்த்ததில் தண்ணீர் வரவில்லை. இப்படி வீணாகிறது. அத னால் விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்க ஏதாவது கருவிகள் இருக்கின்ற னவா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விஞ்ஞான ரீதியில் கருவிகள் ஒன்றும் இல்லை. அனுபவ ரீதியாகத்தான் கண்டுபிடித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் எனக்குத் தெரிந்த வரையில் கடலூர் வேதபுரி முதலியாருக்கு அதிக கிராக்கி இருக்கிறது. ஒய்.எம்.சி.ஏ.யில் கடலூரில் தங்கியிருக்கிறார். எந்தப்பகுதிக்கு அழைத்தாலும் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பல விவசாயிகள் அவரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : ஏற்கனவே இருந்த தொழிலமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் ஓடுகிற காவிரி நதியைப்போல, மூன்று மடங்கு தண்ணீர் பூமிக்கு அடியில் தஞ்சை மாவட்டத்தில் கண்டுபிடித்து, வேளாண்மைக்கு அதைப் பயன்படுத்தலாம் என்று ஒரு திட்டத்தை சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அந்தத் திட்டத்தை அமல்செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றிய விவரமில்லை.

Agricultural and Veterinary Colleges Selections

*155 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether a statement containing the list of students selected to (1) Agricultural College and (2) Veterinary Colleges in Madras State during 1967, the marks which were secured by them in the Colleges and the marks awarded to them by the Selection Committees will be placed on the table of the House ?

விவசாயக் கல்லூரிகள் கால்நடை வைத்தியக் கல்லூரிகள் தேர்வுகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1967-ல் தமிழகத்தில் (1) விவசாயக் கல்லூரி, (2) கால்நடை வைத்தியக் கல்லூரி ஆகியவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஜாபிதாவும் அவர்கள் கல்லூரியில் பெற்ற மார்க்குகள், தேர்வுக் கமிட்டி போட்ட மார்க்குகள் ஆகியவைகளுடன் கூடிய விவர அறிக்கை மேஜை மீது வைக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967–68-ம் ஆண்டு பி.எஸ்.ஸி. (வேளாண்மை) பட்டப் படிப்புக்கும், 1967–68-ம் ஆண்டு பி.வி.எஸ்.ஸி. (கால்நடை மருத்துவம்) படிப்புக்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல்[a] ஒன்று அவையில் வைக்கப் பட்டுள்ளது. இந்த மாணவர்கள் தங்களது கல்லூரிகளில் பெற்ற மதிப் பெண்கள் குறித்த தகவல் இல்லை. நேர்முகத் தேர்வில் தேர்வுக்குழு வழங்கிய மதிப்பெண்களை வெளியிடுவது பொது நலனுக்கு ஏற்றதல்ல.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த மார்க்கு களைச் சட்டமன்றத்தில் வெளியிடுவதற்கு முடியாது என்று அமைச்சர் கூறினார். அதற்குள்ள ஆட்சேபனை என்ன என்று தெளிவாகக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுவரையிலும் அப்படிப்பட்ட நிலைமை உண்டாகவில்லை. சர்க்கார் சார்பற்ற முறையில் வெளியில் இருக் கிறவர்களும் நம் உறுப்பினர்களும் கொண்ட ஒரு கமிட்டி மாணவர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படுகிறது. அவர்கள் மாணவர்களைத் தேர்ந் தெடுக்கும்போது சில மதிப்பெண்கள் வழங்குகிறார்கள். அவர்கள் வழங்கிய மதிப்பெண்களை இங்கே வந்து சொல்லும் வாய்ப்பு இல்லை. அவர்கள் கொடுத்த மார்க்குகளை வைத்து விமர்சனம் செய்யும் வழி நமக்கில்லை. அது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்று கூறினேன்.

திரு. எம். ராஜா அய்யர் : இம்மாதிரி கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கும்போது, பிற்பட்ட ஜாதி பிரிவு என்று இருக்காது ; அது சட்ட ரீதியாகச் செல்லாது என்று நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறதா ? அப்படி யானால் அதன்படி நம்முடைய அரசாங்கத்தின் நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி ஒன்றும் தீர்ப்பு வர வில்லை. கனம் உறுப்பினர் கூறுகிற நிலைமை இதுவரையில் ஏற்பட வில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லமுடியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த மார்க் ஜாபிதாவை ஏற்கனவே ஒரு கமிட்டியில் அழித்துவிட்டார்கள் என்று கூறப்பட்டது. அப்படி அழிக்கப்படாமல் அவை பற்றிய கேஸ்கள் கோர்ட் டுக்கு போனால் அவற்றை ஆஜர்செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மார்க் லிஸ்ட் தயாராக இருக் கிறது.

திரு. எம். எத்திராஜுலு : கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் Scheduled Tribes, Scheduled Castes என்று பெயர் குறிப்பிடப்பட் டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினர் பட்டியல் தனியாக ஏன் குறிப்பிட வில்லை ? முற்போக்கு பிரிவுக்கு 60 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட வகுப் பிற்கு 15 சதவீதம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப் பிற்கு விவரம் குறிப்பிடாததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பின்தங்கிய வகுப்பினருக்கு 25 சதவீதம் என்றும் அரிஜனங்கள் பழங்குடி மக்களுக்கு 16 சதவீதம் என்றும் இருக்கிறது.

---

a Printed as Appendix II on pages 263–268.